# கலாநிதி ஜாயாவின் கல்விப் பணிகள்

எஸ்.எச்.எம்.ஜெமீல்

இஸ்லாமிய நூல் வெளியீட்டுப் பணியகம்

~~7-205~~
16.51

# கலாநிதி ஜாயாவின்
## கல்விப் பணிகள்

அல்ஹாஜ்
எஸ்.எச்.எம். ஜெமீல் எம்.ஏ.

இஸ்லாமிய நூல் வெளியீட்டுப் பணியகம்
வெளியீடு : ௯

# EDUCATIONAL CONTRIBUTIONS OF

# DR. T. B. JAYAH

**Author :** Alhaj S. H. M. Jameel
B. A. (Econ. Sp.) DipEd ; M. A.
State Secretary, Office of the Minister of State for Muslim Religious and Cultural Affairs, Colombo, Sri Lanka

**Publishers:** Islamic Book Publishing Centre, Sainthamaruthu, Kalmunai

**Printers :** The Pacific Press (Pvt) Ltd., Colombo - 13

**First Edition :** 1994 February 20

**Cover Design :** Kalaiwathy Kaleel

**Price :** 30/-



கலாநிதி அல்ஹாஜ் ரி.பி.ஜாயா

දුරකථන/தொலைபேசி/Telephone—
ඇමති / அமைச்சர் / Minister — 81553
පෞද්ගලික ලේකම් / அந்தரங்க செயலாளர் / Private Secretary — 580529
ලේකම් / செயலாளர் / Secretary — 94438
කාර්යාලය / அலுவலகம் / Office

මගේ අංකය / எனது இல. / My No.
ඔබේ අංකය / உமது இல. / Your No.

කායභී නියමයක් නොමැති අමාත්‍යාංශය
இலாகா இல்லா அமைச்சு
MINISTRY WITHOUT PORTFOLIO

22-B, ස්ටැන්මෝර් චන්ද්‍රවංකය, කොළඹ 7.
22-B, ஸ்டான்மோர் கிரசன்ட், கொழும்பு 7.
22-B, Stanmore Crescent, Colombo 7.

Oct. 10 1985

S H M Jameel Esqr
Govt. Teachers' College
Addalachenai

Dear Mr. Jameel,

Assalamu Alaikum W:W:

Herewith I am returning your articles on Dr. T B Jayah.

Mr. Sheriff and I went through the whole thing and found them to be absolutely useful. A few suggestions for further improvement have also been forwarded. May I congratulate you most sincerely for the note worthy contribution you are making towards the literary advancement of our community. We are there at your disposal for any ready assistance you would require by us.

Please accept salaams from Mr.Sheriff.

Yours sincerely,

(A H M Azwer)
Private Secretary to the
Hon. Minister

*இன்றைய மாண்புமிகு முஸ்லிம் சமய, பண்பாட்டலு வல்கள் ராஜாங்க அமைச்சர் அல்ஹாஜ் ஏ.எச். எம். அஸ்வர் பா.உ. அவர்கள் இந்நூலின் மூலப்பிரதியை ஆராய்ந்த பின்னர் 10.10.1985 இல் அனுப்பி வைத்த கடிதம்.*

1 ஜனாப் ஜெமீலின் கட்டுரையால் கிதாபின் சரித்திரமும்
தோற்றம் எந்த அளவுக்கு ஜாவாவுடன் தொடர்பு
பட்டது என்பது விளங்குகிறது.


2 ஜாவாவின் பாரசீகத்தின் வாழ்வு விளக்கப்பட்டிருப்பது
போதாது.

3 ஜாவாவின் இந்து யாத்திரையும், கொள்கையும், அதன்
காலம் ஏற்பட்டதின் தொடர்பும்
இஸ்லாமிய முறையின் ஜாவாவின் ஆத்மீகத் தன்மை
யையும் விளக்கிக் கொள்ள உதவும்.

4 மொத்தத்தில் கட்டுரை திருப்தம்.

H.M. Sherif 30/9/85

*மர்ஹூம் மன்னார் எச்.எம். ஷெரீப் அவர்கள் இந்நூலின் மூலப்பிரதியை ஆராய்ந்த பின்னர் 30.9.1985 இல் எழுதிய சில குறிப்புக்கள். இக்குறிப்புகளுக்கேற்ப உரிய திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன.*



கொழும்பு ஸாஹிராக் கல்லூரியில் 22. 8. 1948 இல் நடைபெற்ற விழாவொன்றில் ஜாயா உறையாற்றுகிறார். இலங்கையின் முதலாவது பிரதமர் கௌரவ டீ. எஸ். சேனநாயக்கா, எ.எம். எ. அஸீஸ் ஆகியோர் அருகே அமர்ந்திருக்கின்றனர்.

## சிறப்புரை

1890 ஆம் ஆண்டில் பிறந்து 1960 இல் வபாத்தான கலாநிதி துவான் புர்ஹானுத்தீன் ஜாயா அவர்கள், இலங்கை வாழ் முஸ்லிம்களின் மத்தியில் காத்திரமான வரலாறு படைத்த சரித்திர புருஷராவார்.

கலாநிதி ஜாயா அவர்கள் பிறந்து வளர்ந்த காலகட்டத்தில் இலங்கை முஸ்லிம்கள் எல்லா வகையிலும், குறிப்பாக கல்வி நிலைப்பாடுகளில் பின்தங்கியிருந்தனர். 1890 இல் இரு முஸ்லிம்கள் மட்டுமே அரசினர் பாடசாலைகளில் ஆசிரியர்களாகக் கடமையாற்றினார்கள்; அவர்களும் பயிற்றப்படாத ஆசிரியர்களே. 1902 ஆம் ஆண்டில், அரசினர் ஊழியர்களாகச் சேவைபுரிந்த முஸ்லிம்கள், சட்ட மா அதிபரின் உதவியாளர் என்ற உயர் பதவி முதல் முஸ்லிம் மையவாடிக் காவல்காரர் என்ற சிற்றுழியர் வரை 119 பேர் மட்டும்தான். விரல் விட்டு எண்ணக்கூடிய அளவில் முஸ்லிம் நொத்தாரிசுகள் இருந்தார்கள். இலங்கையில் படித்து பட்டம் பெற்ற முதல் முஸ்லிம் வழக்கறிஞர் 1905 இல் தோன்றினார். அக்கால கட்டத்தில் வைத்திய கலாநிதிகள், பட்டைய பொறியியலாளர்கள் என்று பகிரங்கமாக கூறிக்கொள்ளும் முஸ்லிம்கள் இல்லை.

இந்த அடிப்பாதாள கல்வி நிலையிலிருந்து முஸ்லிம்களை தூக்கி எழுப்புவதற்கு ஒரு மகத்தான

சமாதானப் புரட்சி தேவைப்பட்டது. இந்நூலாசிரியர் அல்ஹாஜ். எஸ்.எச்.எம். ஜெமீல் கூறுகின்றபடி, மகத்தான சூழலைத் தாக்குப்பிடிக்கும் வகையில் ஒரு மகத்தான கர்ம வீரர் தோன்றினார். அவர் தான் கலாநிதி ரி.பி. ஜாயா அவர்கள்.

ரி.பி. ஜாயா அவர்களின் வாழ்க்கை, பல விசேடபரிமாணங்களை உள்ளடக்கியிருந்தது. இலங்கை மலை நாட்டில் பிறந்த அவர் தலைநகரில் தம்மை ஐக்கியப்படுத்திக்கொண்டார். எனவே அவரது சிந்தனையோட்டத்தில், செயல் திட்டங்களில் சாமானிய, சாதாரண முஸ்லிம்களின் வாழ்வும், வாக்கும் அடி நாதமாகத் தொனித்தது. தமது பொது வாழ்வில் கலாநிதி ஜாயா பல உயர் பதவிகளை வகித்தார். ஸாஹிராக் கல்லூரியின் அதிபர்; இலங்கை அரசினர் கல்விக் குழுவின் உறுப்பினர்; அரச கழக அங்கத்தினர்; அரச கழகத்தின் கல்வி நிறைவேற்றுக் குழுவில் உறுப்பினர்; நாடாளுமன்றப் பிரதிநிதி; அமைச்சர்; பாகிஸ்தானில் இலங்கையின் உயர் ஸ்தானிகர் எனப் பல பதவிகள் அவரை கௌரவித்தன. ஆயினும், என்றும் தம்மை சாதாரண முஸ்லிம்களின் பிரதிநிதி என்றே அவர் கருதினார்.

கலாநிதி ஜாயா ஆங்கிலக் கல்வி முறைமைகளைப் பற்றி சாங்கோபசாங்கமாக அறிந்து வைத்திருந்தார். அவர் உயர்கல்வி பெற்றது இலங்கையின் தலைசிறந்த மிஷனரிக் கல்லூரி ஒன்றிலாகும். ஐரோப்பிய நாகரித்தின் வீச்சு, அதன் தாக்கம் ஆகியவற்றையும் கேசாதிபாதமாக அறிந்து, ஆராய்ந்து வைத்திருந்தார். தமது கலைமாணித்

தேர்வுக்கு, ஐரோப்பிய நாகரிகத்தின் தோற்றுவாயான இலத்தின், கிரேக்க மொழிகளைப் பாடமாகக் கொண்டிருந்தார். எனவே, ஐரோப்பிய நாகரிகத்தின் காந்தத்தன்மை அவர் அறியாதது ஒன்றல்ல.

இஸ்லாமியச் சமய அறிவை எவ்வாறு பாதுகாப்பது, இஸ்லாத்தின் கோட்பாடுகளை எவ்வாறு பேணுவது, ஆங்கில அறிவுக் கோட்பாடுகளை எவ்வாறு பேணுவது, ஆங்கில அறிவை கிரகித்து, அதன் பலாபலன்களை சீரணித்து எவ்வாறு இஸ்லாமிய நாகரிகத்தையும், வாழ்க்கை முறைகளையும் மேம்படுத்துவது என்பன கலாநிதி ஜாயாவை ஆட்கொண்ட சிந்தனைகளாகும். அறிவை, இஸ்லாமயம் ஆக்குதல் (Islamization of learning) கலாநிதி ஜாயாவின் தலையாய பணியாக அமைந்தது. அதன் முக்கியத்துவத்தை இந்நூலாசிரியர் முத்தாரமாக ஏற்றுக்கொண்டு இந்நூலை அதனையொட்டி ஜாயா அவர்கள் நிகழ்த்திய பிரசங்கத்தோடு தொடங்குகிறார்.

கலாநிதி ஜாயாவின் இஸ்லாமிய கல்விக் கருத்துக்கள், கொழும்பு ஸாஹிராக் கல்லூரியில் செயலுருப்பெற்றன. தமது கல்விச் சிந்தனைகளின் வாளாகவும் அதே வேளையில் கேடயமாகவும் அவர் ஸாஹிராக் கல்லூரியை செயலாக்கினார்.

1922 ஆம் ஆண்டில் கலாநிதி ஜாயா ஸாஹிராக் கல்லூரியின் அதிபராக அமர்ந்தவுடன் அதன் இஸ்லாமியப் பரிமாணத்தை விரிவாக்கினார். இஸ்லாமிய பாட நெறிகள், அறபுப்பாடம், இஸ்லாமிய வரலாறு என்பன

பாடவிதானத்தில் ஐக்கியமாயின. அதே வேளையில், கல்வி சித்தியிலும், விளையாட்டுத் துறைகளிலும் ஸாஹிராக் கல்லூரி முன்நின்றது. கலைப்பிரிவு, விஞ்ஞான, வர்த்தக, வாணிப இயல் பிரிவுகள், மாலை நேர பாடவகுப்புகள், வளர்ந்தோருக்கென இரவு நேர பாடவகுப்புகள் என்று பல வகைகளில், ஸாஹிராக் கல்லூரி செழித்து வளர்ந்தது. இம்மட்டோடு நின்றுவிடாமல் இலங்கை முஸ்லிம்களின் தேசிய கல்வி தாபனமாகவும் கலாநிதி ஜாயா ஸாஹிராவை நிலைநாட்டினார். இலங்கையின் எட்டுத்திக்குகளிலுமிருந்து முஸ்லிம் மாணவர்கள் ஸாஹிராவில் குழுமினர். ஒரு தேசிய முஸ்லிம் பிரக்ஞை ஸாஹிராவில் உருவாகியது.

1939 ஆம் ஆண்டளவில் தோன்றிய இரண்டாம் உலக மகாயுத்தம், கலாநிதி ஜாயாவின் சமயோசித கல்வி செயற்பாட்டுக்கு நிலைக்களனாக அமைந்தது. போர் நிமித்தம் கொழும்பு ஸாஹிராக் கல்லூரிக் கட்டிடங்களை அரசு பொறுப்பேற்றதனால் கல்லூரி 1942 இல் தற்காலிகமாக தனது பணிகளைச் சுருக்கிக் கொண்டது. ஜாயா அவர்கள், இலங்கையின் பல பாகங்களில் ஸாஹிராவின் கிளைகளை அமைத்துத் தந்தார். அக்கால நிகழ்வுகளை இந்நூலாசிரியர் கச்சிதமாக விளக்குகிறார். கல்முனை ஸாஹிராக் கல்லூரிக்கும் ஜாயா அவர்களுக்கும் இடையேயுள்ள தொடர்பு பல பேர் அறியாத ஒன்று. அந் நிகழ்ச்சிகளை விஸ்தாரமாக எழுதுகிறார் இந்நூலாசிரியர்.

கலாநிதி ஜாயாவைப் பற்றி பல ருசிகரமான தகவல்கள் இந்நூலில் இருக்கின்றன. எனவே, அவரை

தனி மனிதனாக, குடும்பத் தலைவராக, நண்பனாக ஆலோசகராக பல கோணங்களில் காண முடிகிறது.

கலாநிதி ஜாயா பல வகைகளில் தனது சமுகத் தொண்டினை இலங்கை மக்களுக்கு குறிப்பாகவும் இலங்கை முஸ்லிம்களுக்கு விசேடமாகவும் வழங்கினார். இலங்கை அரசின் கல்வி ஆலோசனைச் சபையில் அங்கம் வகித்து, சிறுபான்மை இனங்களின் கல்விப் பிரச்சினைகளை அக்காலத்தில் அரச பொறுப்பேற்றிருந்த பிரித்தானிய துரைத்தனத்தாருக்கு எடுத்துரைத்து வந்தார். அரச கழகத்தின் கல்வி நிறைவேற்றுக் குழுவில் உறுப்பினராக அமர்ந்து, இலவச கல்வித் திட்டத்தை தீட்டி அமுல் நடத்த அரும்பாடுபட்டார். அக்காலத்தில் வேறு எந்த நாட்டிலும் இல்லாதவாறு இலங்கையில் பாலர் வகுப்பிலிருந்து பல்கலைக்கழகம் வரை இலவசக்கல்வி நடைமுறைக்கு வந்தது. போற்றத்தக்க நன்முத்து என அத்திட்டத்தை வெளிநாட்டாரும் பாராட்டினார்கள். இலங்கை நாடாளுமன்றத்தில் கலாநிதி ஜாயா ஆற்றிய சேவைகள் மகத்தானவை. பாகிஸ்தானில், இலங்கைத் தூதுவராக அவர் கடமைபுரிந்து அந்நாட்டின் அரசாங்கத்தினதும், மக்களினதும் நன் மதிப்புப் பெற்று, பாகிஸ்தானுக்கும் இலங்கைக்கும் இடையில் உள்ள கலாசார பாலத்தை வலுவூட்டினார்.

இவை யாவற்றையும் இந்நூலில் விரிவாகக் காண முடிகிறது. கலாநிதி ஜாயா மறைந்து முப்பது ஆண்டுகளுக்கு மேலாகின்றன. இந்த காலகட்டத்தில் புதியதோர் தலைமுறை தோன்றிவிட்டது. இந்த இளைய

தலைமுறையினருக்கு, குறிப்பாக முஸ்லிம் இளைஞர்களுக்கு, கலாநிதி ஜாயாவின் வாழ்வை, அவர் தம் சாதனைகளை இலகுவாக, இனிதாக, இங்கிதமாக இந்நூல் நினைவுபடுத்துகிறது.

இந்நூலாசிரியரான அல்ஹாஜ். எஸ்.எச்.எம். ஜெமீல், இதை எழுதுவதற்கு விசேட தகுதியுடையவர். கொழும்பு ஸாஹிராக் கல்லூரியில் தமது உயர் கல்வியைப் பெற்று, அங்கிருந்து பல்கலைக்கழகம் சென்றவர். பின்பு, கல்வியில் பட்டப் பின் படிப்புச் சான்றிதழ் முதுமாணியும் பெற்று, இலங்கை கல்விச் சேவையில் சேர்ந்து பல பொறுப்பான பதவிகளை வகித்தவர். கல்முனை ஸாஹிராக் கல்லூரியில் அதிபராக நியமனம் பெற்று, அதைக்கட்டி எழுப்பியவர். இன்று முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சின் செயலாளராக கடமைபுரிபவர். ஆகவே நூலாசிரியரின் வாழ்வில் கல்விக்கரிசனை இணைந்து, பிணைந்து நிற்கிறது.

எனவே கலாநிதி ஜாயாவின் வாழ்வையும் வாக்கையும், வழிநடையையும் நூலாசிரியருக்கு யதார்த்தமாக அச்சொட்டாக எடைபோட முடிகிறது. இந்நூலில் கொள்கை விளக்கமும் செயல் விளக்கமும் கச்சிதமாக, ஒன்றோடு ஒன்று அரண் செய்கின்றன.

கலாநிதி ஜாயாவைப் பற்றி அதிகமாக நூல்கள் தமிழில் இல்லை. ஜாயா அவர்களின் உரைகளும், எழுத்துக்களும் பெரும்பாலும் ஆங்கில மொழியில்தான்

இருக்கின்றன. ஒரு சிலர் கலாநிதி ஜாயாவைப் பற்றி ஆங்கிலத்தில் எழுதியிருக்கிறார்கள். அந்த தகவல்கள் யாவும் இந்நூலில் குறிப்பிடப்பட்டிருப்பது கவனிக்கதக்கது. ஆய்வாளர்களுக்கு அவை உபயோகமாயிருக்கும். மொத்தத்தில் இந்நூல் எல்லோருக்கும் பயன் தருவதாகும்.

**அல்ஹாஜ் எம்.எம்.எம். மஹ்ரூப்**

கொழும்பு.
*15 ஜனவரி 1994*



பாகிஸ்தானின் ஸ்தாபகர் காயிதே ஆஸம் முஹம்மத் அலி ஜின்னாஹ்வின் சகோதரி பாத்திமா ஜின்னாஹ்வுடன் கலாநிதி ஜாயா அமர்ந்திருக்கிறார்.

## என்னுரை

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் முதன்முதலாக 1983 ஆம் ஆண்டில் கல்வித்துறைக்கான முதுமாணிப் பட்டத்தை வழங்கியது. அப்பட்டமளிப்பு விழாவில் கல்வி முதுமாணியைப் பெற்றவர்களுள் நானும் ஒருவன் எனும் பேறினை அல்லாஹ் எனக்குத் தந்தான்.

இத்தகைமைக்காக என்னால் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக் கட்டுரை '1892 இல் இருந்து இலங்கையில் இஸ்லாமியக் கல்விச் சிந்தனை வளர்ச்சியும்; இலங்கை முஸ்லிம் கல்விமான்களின் அதற்கான பங்களிப்பும்' என்பதாகும். 332 பக்கங்களைக் கொண்ட இவ்வாய்வுக் கட்டுரையின், இரண்டாம் இயல் 'இலங்கை முஸ்லிம் கல்விமான்களின் கருத்துக்கள், பங்களிப்புக்கள், அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட நிறுவனங்கள்' என்பதாகும்.

இத்தலையங்கத்தின் கீழ் ஐவரின் கல்விப் பணிகள் ஆராயப்பட்டன. அவர்கள் வருமாறு:

எம்.ஸி. சித்திலெவ்வை
ரி.பி. ஜாயா
ஸேர் றாஸிக் பரீத்
எ.எம்.எ. அஸீஸ்
பதியுத்தீன் மஹ்மூத்

கலாநிதி ரி.பி. ஜாயா பற்றிய பகுதியை விரிவாக்கி, தினகரன் பத்திரிகைக்கு அனுப்பி வைத்தேன். அனுப்பிய ஒரு வாரத்திற்குள்ளாகவே 1985 பெப்ரவரி 11,12,13,14 ஆம் திகதிகளில் தொடர் கட்டுரையாக அது வெளிவந்தது. அவ்வாறு வெளியிட்ட இலங்கையின் அதிசிரேஷ்ட பத்திரிகையாசிரியரான கலாசூரி, ஆஷிக் இ மில்லத் ஆர். சிவகுருநாதன் அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இதனை அப்போதே நூலுருவாக்க எண்ணங் கொண்டேன். எனினும் விடயத் தவறுகள் இடம்பெற்றுவிடக் கூடாதே என்பதற்காக ரி.பி.ஜாயாவுடன் மிக நெருங்கிப் பழகியவரும் அவரை மிக நன்கு அறிந்தவருமான யாரிடமாவது காட்ட வேண்டுமென எண்ணினேன். அதற்கு மிகப் பொருத்தமானவர் என நினைத்து இன்றைய முஸ்லிம் சமய, பண்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் அல்ஹாஜ் ஏ.எச்.எம். அஸ்வர், பாராளுமன்ற உறுப்பினர் அவர்களுக்குக் கட்டுரையை அனுப்பி வைத்தேன். அவர்கள் கட்டுரையை மிகக் கவனமாக வாசித்து, வேண்டிய திருத்தங்களையும் செய்து, அவரது மிக நெருங்கிய நண்பரான மர்ஹூம் மன்னார் எச்.எம். ஷெரீப்பின் திருத்த ஆலோசனைகளுடன் 1985 அக்டோபர் 10 ஆந் திகதியிட்ட கடிதத்துடன் தனது நல்வாழ்த்துக்களையும் தெரிவித்து அனுப்பினார். ஏதோ காரணத்தினால் அது நூலுருப் பெறாதிருந்து, இன்று அவர் எனது அமைச்சராயிருக்கும் வேளையில் வெளிவருவது அல்லாஹ்வின் நாட்டம் போலும். இந்நூலில்

இடம் பெற்றுள்ள படங்களையும் அவரே தந்துதவினார்.

இந்நூலுக்கான முன்னுரையை இந்நாட்டின் பேரறிஞர்களுள் ஒருவரான அல்ஹாஜ் எம்.எம்.எம். மஹரூப் அவர்கள் வழங்கியுள்ளதையிட்டு பெருமைப்படுகிறேன். கொழும்பு ஸாஹிராக் கல்லூரியில் அவர் எமது ஆட்சியியல் பாட விரிவுரையாளர்.

கலாநிதி எம்.ஏ.எம். ஷுக்ரி, கலாநிதி ஏ.ஸி.எல். அமீர்அலி, கலாநிதி டீ. வெசும்பெரும, கே.எம்.எச். அக்பர், நெவில் எதிரிசிங்ஹ, ஏ.ஆர்.எம். எச். சுஹைர், மக்கி உறாஷிம், எஸ்.ஏ.எம். நாளிர், சமீத் எம். இர்ஷாத், டி.யு. விஜயரத்தின, கே. இராஜபுவனேஸ்வரன், காலித் எம். பாறூக், எம் ரட்ணம், நான் போன்றோர் பிற்காலத்தில் தத்தமது துறைகளில் சிறப்புற்றோங்க ஸாஹிரா பலமான அடித்தளத்தை அமைத்துத் தந்தது. அதிபர் எ.எம்.எ. அஸீஸ் எமது ஆதர்ஷ உதாரண புருஷர். பேச்சில், நடையில், பாவனையில் அவரைப் பிரதிபண்ண முயன்றோம். எம்.எப்.எம்.எச் பாக்கீர், ஐ.எல்.எம். சுஃஜப், பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி, பேராசிரியர் எஸ். செல்வநாயகம், ஏ.எம். சமீம், எம்.எம்.எம். மஹரூப், பீ. பாலசிங்கம், ரி.ஆர்.ஆர்.சல்டின், என்.சண்முகரெத்தினம் என்போர் எமக்குக் கற்பித்தனர். அவர்கள் வெறும் வகுப்புக் கற்பித்தலோடு நின்றுவிடவில்லை. இலக்கியம், வானொலி, விவாத மேடை, பொதுக்கூட்டம், லேக்உறவுஸ் என்று எங்கெல்லாமோ அழைத்துச் சென்று விரிந்த உலகத்தைக் காட்டி எம்மை உயர உயரத் தூக்கி விட்டனர். இவர்கள்

எம்மிடம் வளர்த்துவிட்ட அறிவு, ஆற்றல், வாய்மை என்பவற்றால், பல்கலைக்கழகம் சென்றவுடன் நாம் ஏனையோரைவிட மேலோங்கி நின்றோம். அவர்களின் ஸாஹிரா சகாப்தத்தை இன்றும் நினைவு கூருகிறோம்.

இஸ்லாமிய நூல் வெளியீட்டுப் பணியகத்தின் 9 ஆவது வெளியீடாக இது வெளிவருகின்றது. அட்டாளைச்சேனை ஆசிரிய கலாசாலை அதிபராக நான் பணியாற்றிய வேளையில், 28.8.1983 இல் இவ்வெளியீட்டுப் பணியகம் அங்கு அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. அதன் பணிப்பாளர் சபை பின்வருவோரைக் கொண்டது: எஸ்.எச்.எம். ஜெமீல், அ.ஸ. அப்துஸ் ஸமது, மருதூர் ஏ. மஜீத், மருதூர்க்கொத்தன் வீ.எம்.எம். இஸ்மாயில், அன்பு முகையதீன், பாலமுனை பாறூக், எம். ஏ. உதுமா லெவ்வை, பாவலர் பஸீல் காரியப்பர், மாறன் யூ. செயின், எஸ். ஏ. ஆர். எம். செய்யத் ஹஸன் மௌலானா, ஏ.யூ.எம் ஏ. கரீம், ஏ.கே.எம். நியாஸ். இந்நூலை இப்பணியகத்தின் மூலம் வெளியிட அனுமதித்தமைக்காக அவர்களுக்கு எனது நன்றிகள்.

இந்நூலாக்கத்தில் உதவிய "சௌதுல்ஹக் " அல்ஹாஜ் எப். எம். பைரூஸ் அவர்களுக்கு நன்றியுடையேன். அழகிய முறையில் இதனை அச்சிட்ட பசுபிக் அச்சக உரிமையாளர்களான ஜனாப் எஸ். எம். சம்சுத்தீன், ஜனாப் ரீ. அப்துல் மஜீத் அவர்களுக்கும் நன்றிகள் உரித்தாகுக.

**எஸ்.எச்.எம். ஜெமீல்**

# கலாநிதி ஜாயாவின் கல்விப் பணிகள்

இலங்கை முஸ்லிம் சங்கம் 1919 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் கொழும்பில் நடத்திய கூட்டமொன்றில் 'கல்வியும் தேசிய முன்னேற்றமும்' எனும் தலையங்கத்திற் பேசும்போது ரி.பி.ஜாயா பின்வருமாறு குறிப்பிட்டார்:

*"நாங்கள் என்ன சாதித்திருக்கிறோம்? ஏனைய சமூகத்தினர் வாழ்க்கையின் பல்வேறு துறைகளிலும் சிறப்பானவர்கள் பலரை உற்பத்தி செய்திருக்கின்றனர். புகழ் பெற்ற வழக்கறிஞர், மருத்துவர், அரசியல்வாதிகள் மற்றும் பலரை அச்சமூகங்கள் கொண்டிருக்கின்றன.*

*முஸ்லிம்களுக்கு என்ன இருக்கிறது? அரச சேவையில் பிரபல்யம் பெற்ற எமது முஸ்லிம்கள் எவராவது இருக்கின்றனரா? கல்வித்துறையில் சிறப்புற்ற எவராவது எம்மிடையே உள்ளனரா? புகழ்பெற்ற சட்டசபை அல்லது முனிசிப்பல் சபை அங்கத்தினர் எவரையும் நாம் பெற்றுள்ளோமா?*

எமக்கென்று சில கல்லூரிகளையும் பாடசாலைக ளையுமாவது கொண்டிருக்கிறோமா? முஸ்லிம் பாடசாலைகளுக்காவது எமது பிள்ளைகளைப் பெருந்தொகையாக அனுப்பியுள்ளோமா? அரைமனத் தோடு நாம் நடத்தும் ஓரிரண்டு ஆரம்பப் பாடசாலைகள் உண்டென்பது உண்மையே. தரமான நல்லதொரு கல்லூரி எமக்குண்டு என்று நாம் விசுவாசமாகக் கூறமுடியுமா? திட்டவட்டமாக இல்லையென்றே கூறலாம்.

சிறந்த வர்த்தகர்களைக் கொண்ட ஒரு சமுதாயமும் உலகின் இன்றைய நவீன நாகரிகத்துக்கு வழிவகுத்துக் கொடுத்த மகத்தான பண்பாடொன்றின் வாரிசுகளுமான இந்நாட்டில் வாழும் மூன்று இலட்சத்திற்கு மேற்பட்ட மக்களைக் கொண்ட இச்சமுதாயம் இவ்வாறான நிலையை ஏற்றுக்கொள்ளுதல் அவமானமில்லையா? பெருந்தொகை யான வர்த்தகர்களையும் செல்வச் செழிப்புள்ள நிலச் சுவாந்தர்களையும் கொண்டுள்ள இச்சமூகம் வரலாற்றின் ஆரம்ப காலத்திலிருந்தே சிறப்பான நாகரிகத்தைக் கொண்டோரின் வாரிசுகளாக, இன்றும் அந்நாகரிகச் சிறப்பில் வாழ்ந்து கொண்டிருக்கும் நாம் இத்தகைய நிலையிலிருத்தல் வெட்கமாயில்லையா?

இந்நிலையை மேலும் நீடிக்க விடுதல் தகாது. அதற்காக நாம் இந்நிலையிலிருந்து விடுபடல் வேண்டும். அதனாற்றான் எமது முஸ்லிம் சகோதரர்கள் கொழும்பில் தமக்கெனக் கல்லூரியொன்றை நிறுவ விசுவாசத்துடன் முற்பட்டபொழுது உளம் நிறைந்த மகிழ்வுடன் நான் வரவேற்றேன்.

அதைப்பற்றி நாம் கதைத்துவிட்டோம். ஆனால் இதுவரையும் எதையும் சாதிக்கவில்லை. இவ்விலட்சியத்தை அடைவதில் பெரும் இடையூறுகள் உண்டென்பது உண்மையே. எவ்வித கஷ்டமுமில்லாமல் செய்யக்கூடிய இவ்வாறான காரியம் உலகத்தில் எதுதானுண்டு? கோழை மனங்கள் மட்டுமே அவற்றின் முன்னால் நடுநடுங்கும்.

இந்திய முஸ்லிம்களின் ஆங்கிலக் கல்வியினது தந்தையான ஸேர். செய்யத் அஹமத்கானின் மாபெரும் உதாரணம் எம்மைச் செயலில் இறங்கத் தூண்டுதல் வேண்டும். அவர் தமது இலட்சியத்திற் கண்ணாகிக் காரியத்தில் இறங்கினார். விரைவிலேயே அலிகார் கல்லூரி உதயமானது.

இன்றைய எனது வினா - இலங்கையின் ஸேர். செய்யத் அஹ்மத்கான் ஆகப்போவது யார்? அதன்மூலம் முழுச் சமுதாயத்தினதும் நிரந்தர நன்றிக்கு உரித்தாகப் போகிறவர் யார்? என்பதேயாகும்.

இலங்கை முஸ்லிம்களாகிய நாம் சரியான பாதையிலும், ஏற்கக் கூடிய வழிகளிலும், எமது பாரம் பரியத்துக்கேற்ற முறையிலும், எமது மதக் கொள்கைக்கு ஏற்பவும் முன்னேறிச் செல்கிறோமா? நாம் அவ்வாறு செல்லவில்லை என்பதை எவரும் மறுக்கமுடியாது.

நாம் ஏதோ முயற்சிகள் செய்து கொண்டிருக்கிறோம். ஆனால் எமது கல்விமுறை, எமது பாரம்பரியத்திலிருந்து விடுபட்டதாயும் தேசியவாழ்விலிருந்து விலகியதாயும்,

எமது யதார்த்த சமூகச் சூழலிலிருந்து அப்பாற்பட்டதாயும் அமைந்துள்ளது. எமது கல்வி முறையே உண்மையில் தவறானது.

முதலாவது, இலங்கையின் போதனாமொழி தாய்மொழியாயிராது பிறநாட்டு மொழியொன்றாயிருக்கிறது. இரண்டாவது; இலங்கை போன்ற கீழைத்தேய நாடொன்றில் எமது இலக்கியப் பாரம்பரியங்களான சமஸ்கிருதம், பாளி, அறபு இலக்கியத்துக்கு முக்கியத்துவ மளியாது, மேலைத்தேய புராதன இலக்கியங்களுக்கு அளவுக்கு மீறிய முக்கியத்துவம் அளிக்கிறோம். உள வளர்ச்சிக்கான உரிய முறைகள் எம்மால் கைக்கொள்ளப்படவில்லை. வெறும் மனனஞ் செய்யும் முறையொன்றே எம்மால் கைக்கொள்ளப்பட்ட காரணத்தினால் மகான்களையும், தலைவர்களையும் நாம் பெறத் தவறிவிட்டோம். தேசத்தைக் கட்டியெழுப்பக்கூடியோர் எம்மிடையே இல்லை.

ஒரு முஸ்லிம் மாணவனை எடுத்துக் கொள்வோம். மாபெரும் வீரர் அலியைப் பற்றிக் கேட்டுப் பாருங்கள். அவ்வாறான மகோன்னத வீரரொருவர் தமது சமூதாயத்தாரிடையே வாழ்ந்ததாகக் கேள்விப்பட அதிசயிப்பான். உமர் என்பவரைப் பற்றித் தெரியுமா எனக் கேட்டுப் பாருங்கள்; அப்பெயரைக் கேட்கவே அவன் ஆச்சரியப்படுவான்.

இவற்றை விடுத்து, ஹோமர் என்றால் யார்? வேர்ஜில் எங்கு வாழ்ந்தார்? சிசேரோ என்ன செய்தார்? கிரேக்கர் யாரை வெற்றி கொண்டனர்? ரோமரின்

வெற்றிகள் என்ன? சொக்கிரட்டீஸ் என்ன போதித்தார்? செனோ போதித்ததென்ன? - இப்படிப்பட்ட வினாக்களை அவனிடம் கேட்டுப் பாருங்கள். விளைவு என்னவாயிருக்கும்? கேள்வி கேட்பவரும், பரிசோதிப்பவரும் ஆச்சரியப்படுமளவுக்கு இவ்விடயங்களிலுள்ள புலமையை அவன் வெளிப்படுத்துவான்.

இவற்றை விடுத்து தேசிய ரீதியில், தேசிய வாழ்வை விருத்தி செய்வதற்கு எத்தகைய கல்வி அளிக்கப்படல் வேண்டுமென நீங்கள் கேட்கலாம். கல்வியின் அடிப்படை அம்சம் யாதெனில், எப்போதும் தெரிந்ததிலிருந்து தெரியாததற்குச் செல்லவேண்டும். கல்வியின் ஆரம்பக் கட்டத்தில், போதனை தாய்மொழியில் நடைபெறுதல் வேண்டும். அதன் பின்னரே தொடர்ந்து கல்வி கற்க விரும்பினால் எமது மாணவர் ஆங்கிலத்தைப் போதனை மொழியாகக் கொள்ளட்டும். எனது ஆலோசனையாக இதனையே கூறுகிறேன்.

ஆங்கிலம் எல்லையில்லா அறிவுப் பொக்கிஷத்தைத் தன்னகத்தே கொண்டுள்ளது. எனவே நான் ஆட்சேபிப்பது ஆங்கிலத்தையும், ஆங்கில இலக்கியத்தையும் கற்பதல்ல; ஆனால் ஆங்கிலப் புராதன இதிகாச இலக்கியத்துக்கு இவ்வளவு தூரம் அளவுக்கு மீறிய முக்கியத்துவம் வழங்குவதையே ஆட்சேபிக்கிறேன்.

எனவே, வருங்காலத்தில் எமக்கென முஸ்லிம் கல்லூரி ஒன்றிருக்குமாயின், அங்கு மேலைத்தேயப் புராதன இதிகாச இலக்கியங்களுக்கு நிச்சயம் முதலிடம்

வழங்கமாட்டோம். நாம் மிகுந்த ஆர்வத்தோடு அதற்குப் பதிலாக அறபைக் கற்க முயல்வோம்.

முஸ்லிம் தலைவர்களுக்கு எனது பணிவான விதப்புரை யாதெனில், முஸ்லிம் சிறுவர்களுக்கான கல்லூரிகளையும், ஆரம்பப் பாடசாலைகளையும் ஒருங்கே ஆரம்பிக்க முடியாவிட்டால், அவர்கள் ஒரேயொரு முஸ்லிம் கல்லூரியையாவது ஆரம்பிக்கட்டும்; ஏனெனில் சமுதாயத்தைக் கட்டியெழுப்பக் கூடிய இளம் வீரர்களைத் தயார் பண்ணக்கூடிய ஒரு மத்திய களமாக அது அமைதல் வேண்டும்.

எமது இன்றைய தலையாய தேவை கல்வியாகும். அக்கல்வி சாதாரண ஆரம்பக் கல்வியோ அல்லது அரைகுறைக் கல்வியோ அல்ல; மாறாக வீரர்களையும் வீராங்கனைகளையும், தலைவர்களையும், சீர்திருத்தவாதிகளையும், சிந்தனையாளர்களையும், தத்துவஞானிகளையும் உற்பத்தி செய்யக்கூடிய ஒன்றாக அமைதல் வேண்டும். முன்னேற்றகரமான, ஒளிபெற்ற, பலமிக்கவொரு சிறுபான்மையினராக அக்கல்வி எம்மை ஆக்குதல் வேண்டும்."

1919 ஆம் ஆண்டில் ரி.பி.ஜாயா நிகழ்த்திய இவ்வுரை தூர தரிசனம் வாய்ந்ததொன்றென்பதை ஜாயாவே அவ்வேளை உணர்ந்திருக்கமாட்டார். இலங்கையின் ஸேர். செய்யத் அஹமத்கான் ஆகப் போவது யார்? அதன் மூலம் முழுச் சமுதாயத்தினதும் நிரந்தர நன்றிக்கு உரித்தாகப் போகிறவர் யார்? என

அக்கூட்டத்தில் அவர் வினா எழுப்பினார். பிற்காலத்தில் தானே அந்நிலையை வரித்து, சமுதாயத்தினதும், நாட்டினதும் நினைவில் என்றும் நிலைத்து நிற்கப்போகிறார் என்பதை அவரே அறிந்திருக்கமாட்டார்.

## பிறப்பும் வாழ்வும்

துவான் புர்ஹானுத்தீன் ஜாயா 1890 ஆம் வருடம் ஜனவரி மாதம் 1 ஆந் திகதி புதன்கிழமை காலை 10.00 மணிக்கு கலகெதர எனுமிடத்தில் பிறந்தார்.

அவரது கல்வி வாழ்க்கை பின்வருமாறு அமைந்தது:

1901 – 1902 ஆரம்பக்கல்வி – எஸ்.பி.ஜி. பாடசாலை,
– கொட்டாஞ்சேனை, கொழும்பு
(Society for the Propagation of the Gospel - now Cathedral College)

1903 –ஆறாம் வகுப்பு, புனித தோமஸ் கல்லூரி
1906 – கனிஷ்ட கேம்பிரிட்ஜ் பரீட்சையிற் சித்தி
1907 – சிரேஷ்ட கேம்பிரிட்ஜ் பரீட்சையிற் சித்தி
1908 – இலண்டன் மெற்றிக்குலேசன் சித்தி
1909 – புலமைப் பரிசில் பரீட்சையிற் சித்தி
1913 – பட்ட முதல் பரீட்சையிற் சித்தி
1916 – இலண்டன் கலைமாணிப் பட்டப் பரீட்சையிற் சித்தி, பாடங்கள் : லத்தீன், கிரேக்கம் வரலாறு, பொருளியல்

புனித தோமஸ் கல்லூரியிற் கற்கும் காலத்திற் சிறப்பான மாணவராகத் திகழ்ந்து பல பரிசுகளையும் பெற்றிருக்கிறார். கனிஷ்ட பிரிவு கணிதத்திற்கான ஏ.ஸி.மெண்டிஸ் பரிசு; லத்தீனுக்கான டாக்டர் ஈபெல் பரிசு; இலக்கியத்துக்கான கிறிஸ்தோபர் ஒபயசேகரா முதற் பரிசு; வகுப்பில் முதல் மாணவனுக்கான பரிசுகள் என்பன அவற்றுட் சிலவாகும்.

அவரது தொழில் வாழ்வு பின்வருமாறு அமைந்தது:

1910 ஜனவரி - உதவி ஆசிரியர், தர்மராஜ கல்லூரி, கண்டி

1910 மே - உதவி ஆசிரியர், பிரின்ஸ் ஒப் வேல்ஸ் கல்லூரி, மொரட்டுவை


1917 மே - உதவி ஆசிரியர், ஆனந்தாக் கல்லூரி, கொழும்பு

1921 செப்டம்பர் - அதிபர், ஸாஹிராக் கல்லூரி, கொழும்பு

மார்க்கக் கல்வியை குருணாகலையில் ஒமர்தீன் லெவ்வை, நூர்தீன் றலீன் என்போரிடமும்; கொழும்பில் கப்டன் மோஸத் என்பவரிடமும் பெற்றார்.

1915 நவம்பர் 20 இல் ஒெய் ஜெரி பூரா எனும் பெண்மணியை விவாகம் முடித்தார்.

அவரது சேவைக்களங்கள் பின்வருமாறு :-



பலஸ்தீன் முப்தி ஹாஜி ஹுஸைனுடன் ஜாயாவின் பாரியார்

1921 –1948: அதிபர், ஸாஹிராக் கல்லூரி, கொழும்பு
1924 –1931: சட்டநிரூபண சபை அங்கத்தவர்
1936 –1947: சட்டசபை அங்கத்தவர்
1948 –1950: தொழில், சமூகசேவை அமைச்சர்
1950 –1957: பாகிஸ்தானில் உயர் ஸ்தானிகர்
1960 மார்ச்: நாடாளுமன்ற அங்கத்தவர்
1960 மே 31: இறப்பு

கொழும்பு ஆனந்தாக் கல்லூரியில் அதிபர் பி.டி.எஸ். குலரத்தினாவின் கீழ்க் கடமையாற்றிய ஜாயாவைப் பற்றி, அவருடன் ஆசிரியராகக் கடமையாற்றிய பேராசிரியர் ஜி.பி. மலலசேகரா பின்வருமாறு குறிப்பிடுகிறார்:

"கல்லூரியினது ஆசிரியர் குழாத்தின் தலைவர் போன்று ஜாயா விளங்கினார். ஆசிரியர்களும், மாணவர்களும் அவரை மிகவும் நேசித்து மரியாதை செலுத்தினர். மிகவும் பிரபல்யமான விரிவுரையாளராக அவர் விளங்கினார். பிரித்தானிய, ஐரோப்பிய வரலாறுகளின் வளங்களையும், கிரேக்க, ரோம இலக்கியச் செல்வங்களையும் நன்கு அறிந்து அவற்றிற் புலமை பெற்றிருந்ததால், ஜாயாவின் வகுப்புக்களை எம்மாணவனும் தவற விடுவதில்லை. ஏனெனில், அவரது விடய ஞானமும், அவற்றை விளங்கவைக்கும் ஆற்றலும் மிகவும் கவர்ச்சியுடையவையாயிருந்தன. ஆயினும், அவரது முஸ்லிம் சமுதாயத்திடமிருந்து அழைப்பு வந்ததும் அவ்வழைப்பையேற்று, ஆனந்தாவை விட்டும் விலகி, ஸாஹிராவின் அதிபரானார்."

ஆனந்தாக் கல்லூரியில் அவரிடம் கற்ற மாணவர்களுள் கலாநிதி என்.எம். பெரேரா, பிலிப் குணவர்த்தனா, றொபட் குணவர்த்தனா ஆகியோரும் அடங்குவர்.

## ஸாஹிரா சகாப்தம்

1919 இல் நிகழ்த்திய சொற்பொழிவில் "இலங்கையின் ஸேர் செய்யத் அஹமத்கான் ஆகப் போகிறவர் யார்?" எனக் கேட்ட ஜாயாவே அப்புகழை வரித்துக்கொள்வதற்கான வாய்ப்பைக் கொழும்பு ஸாஹிராக் கல்லூரி அவருக்கு ஏற்படுத்திக் கொடுத்தது. 1921 ஆம் வருடம் செப்டம்பர் 1 ஆம் திகதி தனது 31 ஆவது வயதில் அவர் கொழும்பு ஸாஹிராக் கல்லூரியின் அதிபரானார். 1948 இல் இக்கல்லூரியை எ. எம். எ. அஸீஸ் அவர்களிடம் ஒப்படைக்கும்வரை 27 வருடங்கள் அதன் அதிபராகக் கடமையாற்றினார். இக்காலப் பரப்பிலே இலங்கை முஸ்லிம்களின் கல்விப் போக்கை நிர்ணயிக்கக் கூடிய வாய்ப்பு அவருக்குக் கிடைத்தது.

கொழும்பு ஸாஹிராவை அவர் ஒப்பெடுக்கும் பொழுது, அது இருந்த நிலையை அவரே பின்வருமாறு கூறியுள்ளார்:

"அதன் வெளித்தோற்றம் மிகப் பரிதாபகரமாக இருந்தது. ஆறு ஆசிரியர்களும், ஐம்பத்தொன்பது மாணவர்களும் அங்கிருந்தனர். நல்ல தளபாடம் என்று கூறுவதற்கெதுவுமில்லை. ஆரம்பப் பாடசாலையொன்றுக்

குப் போதுமான கட்டிடமொன்றே இருந்தது. இரவுவேளைகளில் விரும்பத்தகாதோர் இக்கட்டிடத்தினுட் புகுந்து இதனை உபயோகித்தனர். இதன் சுற்றுப்புறம் எவ்வித கவர்ச்சியுமற்றதாயிருந்தது. இக்கட்டிடத்திலிருந்து சுமார் இருபது, முப்பது யார் தூரத்தில் பற்றைக்காடு வளர்ந்திருந்தது. சமூகவிரோதிகளின் புகலிடமென மக்கள் இதனைக் கருதினர்."

ஜாயாவின் தலைமைத்துவம் கிடைத்தவுடன் நிலைமை முற்றிலும் மாற்றமடைந்தது. 1922இல் மாணவர் தொகை 150 ஆகவும், ஆசிரியர் தொகை 30 ஆகவும் அதிகரித்தது. பல புதிய பாடங்கள் கற்பிக்கப்படத் தொடங்கின.

அதிகரிக்கும் மாணவர் தொகைக்கேற்பக் கட்டிடங்களின் விஸ்தீரணத்தையும் அதிகரிக்க வேண்டியேற்பட்டது. அல்ஹாஜ் என்.டி.எச். அப்துல் கபூர் விஞ்ஞான கூடமொன்றைக் கட்டி அன்பளிப்புச் செய்தார். கல்லூரியின் பிரதான கட்டிடத்துக்கான செலவிலும் பெருந்தொகையை அல்ஹாஜ் அப்துல் கபூர் அவர்களே வழங்கினார். அதனாற்றான் இன்றுவரை ஸாஹிராக் கல்லூரியின் கூட்ட மண்டபம் 'கபூர் மண்டபம்' என அழைக்கப்பட்டு வருகின்றது. விளையாட்டு மைதானமும், கனிஷ்ட பிரிவுக்கான கட்டிடமும் அல்ஹாஜ் பி.பி. உம்பிச்சி அவர்களினால் நன்கொடையாக வழங்கப் பட்டன. கரீம் ஜீ ஜபர்ஜீ அவர்களும் பாரிய நன்கொடைகளை வழங்கினார். இவர்களைப் போன்ற இன்னும் பலரது உதவிகளினால் கல்லூரியின் கட்டிட, உபகரணத்

தேவைகள் துரித கதியில் நிறைவு பெற்று வந்தன.

இவ்வாறான வளர்ச்சியுடன், உயர் கல்வியில் நாட்டங்கொண்ட முஸ்லிம்கள் அனைவரும் நாட்டின் சகல பாகங்களிலுமிருந்து தமது பிள்ளைகளைக் கொழும்பு ஸாஹிராவுக்கு அனுப்பத் தொடங்கினர். ஸாஹிரா விலிருந்து பல்கலைக்கழகம் செல்லும் மரபு ஆரம்பித்து, அது தொடர்ந்து வியாபித்துப் பரந்தது. சட்டத்துறையிலும், கணக்கியற்றுறையிலும், வர்த்தகத்துறையிலும் ஸாஹிரா உற்பத்தி செய்த மாணவர்கள் காலெடுத்து வைக்க ஆரம்பித்தனர். இன்று இந்நாட்டின் உயர் அந்தஸ்திலும், பதவிகளிலுமுள்ள சிரேஷ்ட முஸ்லிம்களிற் பெரும்பாலோர் ஜாயாவால் உருவாக்கப்பட்டவர்களேயாவர். எனவே, இருபதாம் நூற்றாண்டின் முதல் அரைவாசிக் காலப் பகுதியில் இந்நாட்டு முஸ்லிம்களிடையே ஏற்பட்ட மறு மலர்ச்சியில் பெரும்பங்கு ஜாயாவையே சாரும்.

பாடசாலை மாணவரின் கல்வி வளர்ச்சியில் மட்டுமன்றி, ஸாஹிராவைத் தளமாகக்கொண்டு, மாணவர் முழுமையான ஆளுமை பெறுவதிலும் அவர் அக்கறை செலுத்தினார். இதற்காகக் கிரிக்கெட், குத்துச் சண்டை, மல்யுத்தம், றக்பி, உதைபந்து போன்ற பல்வேறு விளையாட்டுத் துறைகளையும் புகுத்தினார். ஸாஹிரா மாணவர் இத்துறைகளிற் சிறந்து விளங்கினர். 1932 இல் ஸாஹிரா மாணவர் கண்டி திரித்துவக் கல்லூரி மாணவரை றக்கர் உதைபந்தாட்டத்திற் தோற்கடித்து இலங்கைப் பாடசாலைகளிடையே அதிசிறந்த குழுவுக்கான கேடயத்தைப் பெற்றனர். பின்னர் குத்துச் சண்டையிலும்

'ஸ்டப்ஸ் ஷீல்ட்' எனப்படும் கேடயத்தைப் பெற்று அதிசிறந்த குழுவாகினர்.

மாணவரின் எழுத்தாற்றலையும், இலக்கியத் துறையையும் வளர்ப்பதற்காக 'கிறசெண்ட்' எனும் சஞ்சிகையும் அவரால் ஆரம்பிக்கப்பட்டது.

பாடசாலைக்குச் சென்று கற்பதற்கான வயதையும் வாய்ப்பையுமுடைய மாணவர்களுக்கு ஸாஹிராவில் சகல வசதிகளையும் அளிக்கும் அதேநேரத்தில்; அத்தகைய வாய்ப்பற்ற பலர் இருப்பதை ஜாயா உணர்ந்தார். வயது கூடியவர்கள், சாதாரண பாடசாலைக்குச் சென்று கற்கக் கூடிய பொருளாதார வசதி அற்றோர், வேலைக்குச் செல்வோர் என்போர் தமது கல்வியைத் தொடர்வதற்கான வாய்ப்பொன்றை ஏற்படுத்த அவர் விழைந்தார். இதன் பயனாகவே 1921 அக்டோபர் 10 ஆந் திகதி இலவச இரவுப் பாடசாலையொன்று கொழும்பு ஸாஹிராக் கல்லூரியில் ஆரம்பிக்கப்பட்டது. இதன் மூலம் பல மாணவர் பெரும் நன்மை பெற்றனர்.

பிறிதொரு சமயம், காலைநேரப் பாடசாலையில் ஏற்படும் இடநெருக்கடியைத் தவிர்ப்பதற்கும், வயது கூடிய மாணவருக்கு வாய்ப்பளிப்பதற்குமாக பின்னேரப் பாடசாலையொன்றும் ஆரம்பிக்கப்பட்டது.

மாணவரின் உடல் நலனைப் பேணுவதற்காக, பற் சிகிச்சை நிலையமொன்றும் கல்லூரி வளவினுள் நிறுவப்பட்டு இன்றுவரை இயங்கி வருகிறது.

ஜாயாவினதும், அவர் காலத்து ஸாஹிராவினதும் பங்களிப்பினைப் பற்றி, இலங்கைப் பல்கலைக் கழகத்தின் முதலாவது உபவேந்தர் ஸேர். ஐவர் ஜென்னிங்ஸ் பின்வருமாறு கூறுகிறார்:

"1927 ஆம் வருடத்தில் இலங்கைப் பல்கலைக் கழகக் கல்லூரியிற் கற்ற 315 மொத்த மாணவர்களுள் 3 பேர் மட்டுமே முஸ்லிம்களாயிருந்தனர். 1942 இல் இலங்கைப் பல்கலைக் கழகம் உருவானபோது மொத்தம் 904 மாணவர்களுள், 25 பேர் முஸ்லிம்களாயும்; 1946 இல் 1302 மாணவர்களுள் 37 பேர் முஸ்லிம்களாயுமிருந்தனர். 1927 இலிருந்து 1946 வரை மொத்த மாணவரின் எண்ணிக்கை 185 சதவீதம் அதிகரித்துள்ளது. முஸ்லிம் மாணவரின் எண்ணிக்கையோ 800 சதவீதம் அதிகரித்துள்ளது. விகிதாசாரப்படி இவ்வெண்ணிக்கை மிகச் சிறியதே. ஆனால் கல்வித்துறையில் பெருந்தொகையொன்றை அதிகரிப்பதைவிடச் சிறிய தொகையொன்றை அதிகரிப்பதே கஷ்டமாகும். ஏனெனில் ஒரு பரம்பரையே தனது வாரிசுகளை உற்பத்தி செய்தல் வேண்டும். எனவே கடந்த 25 வருட காலத்தில் முஸ்லிம் கல்வி முன்னேற்றத்துக்கு எடுக்கப்படும் முயற்சிகளை இவ்வெண்ணிகைகள் காட்டுகின்றன. இம்முயற்சிகளுள் ஸாஹிராக் கல்லூரியினதும் ஜாயாவினதும் பங்கு தலையாயதாகும்."

## மாகாண விஸ்தரிப்பு

கொழும்பு ஸாஹிராவோடு ஜாயாவின் பணிகள் மட்டுப்படுத்தப்படவில்லை. இலங்கையெங்கணுமிருந்து வசதி படைத்த மாணவர்கள் இங்கு வந்து கல்வி கற்றனராயினும், எண்ணற்ற இன்னுமெத்தனையோ மாணவர் கொழும்புக்கு வரமுடியாதிருந்தனர். அவர்களது கல்வி முன்னேற்றத்திலும் ஜாயா அக்கறை கொண்டார்.

இதற்கான வாய்ப்பை இரண்டாவது உலக மகாயுத்தம் அவருக்கு ஏற்படுத்திக் கொடுத்தது. கொழும்பிலுள்ள ஏனைய முக்கிய கட்டிடங்களைப் போன்று, ஸாஹிராக் கல்லூரியும் யுத்த நடவடிக்கைகளுக்காக அரசாங்கத்தினாற் கையேற்கப்பட்டது. இது நடைபெற்றது 1942 ஆம் ஆண்டிலாகும். அவ்வாண்டிலே யப்பானியர் இலங்கையை ஆக்கிரமிக்க முயல்வர் என எதிர்பார்க்கப்பட்டதினால், யுத்த நடவடிக்கைகளுக்கு இக்கட்டிடங்கள் உபயோகிக்கப்பட்டன.

மூடப்பட்ட பாடசாலைகளின் ஆசிரியர்களுக்கான வேதனம் வழங்குவது பற்றிய எத்தீர்மானமும் எடுக்கப்படவில்லை. ஒருநாள் அரச சபைக் கூட்டத் தொடர் கலையவுள்ள நேரத்தில் பிறிதொரு கல்விமானான சென் ஜோஸப் கல்லூரி அதிபர் பிதா பீட்டர்பிள்ளை, ஜாயாவைத் தேடி அவசர அவசரமாக அரசசபைக் கட்டிடத்துக்கு வந்தார். பாடசாலைகளை மூடும்பொழுது ஆசிரியர்களுக்கான வேதனம் வழங்குவதற்கான எத்தகைய ஏற்பாடுகளும்

செய்யப்படவில்லை என்பதைப் பிதா பீட்டர்பிள்ளை ஜாயாவுக்கு சுட்டிக் காட்டினார். ஜாயா உடனடியாகவே சபையினுள் பிரவேசித்தார். அப்போது சபை கலைவதற்கு ஆயத்தமாகிக் கொண்டிருந்தது. அவர் மிக அவசரமாக இவ்விடயத்தை அரசாங்கத்தின் கவனத்துக்குக் கொண்டு வந்தார். பாடசாலைகள் மூடப்பட்டிருந்தாலும், ஆசிரியருக்குரிய சம்பளம் வழங்கப்படுமெனக் கல்வியமைச்சர் உறுதியளித்தார். எனவே இவ்விரு கல்விமான்களது தூர திருஷ்டியும், உடன் நடவடிக்கையுமே பெரும் பிரச்சினையொன்று உருவாவதைத் தடுத்தது.

ஸாஹிராக் கல்லூரி மூடப்பட்டதால், மாணவர் அனைவரும் தத்தமது வீடுகளுக்கு அனுப்பப்பட்டனர். அவ்வாறு சென்றோரின் கல்வி தடைப்படாமலிருக்கவும் நாட்டின் பல்வேறு பகுதிகளிற் புதிய பாடசாலைகளை ஆரம்பிக்குமுகமாகவும் ஸாஹிராவின் பல கிளைகள் ஆரம்பிக்கப்பட்டன. ஸாஹிராவின் கிளைகள் என இவை ஆரம்பிக்கப்பட்டதற்கான காரணம் யாதெனில் யுத்த காலத்தில் புதிய பாடசாலைகள் எதையும் ஆரம்பிக்க அரசாங்கம் அனுமதிக்கவில்லை; அதனால் தனித்துவமான பாடசாலைகளை மாகாணங்களில் ஆரம்பிக்க முடியாதிருந்தது. எனவே கொழும்பிலிருந்து வீடுகளுக்குச் சென்றுள்ள மாணவரின் நலனுக்காக ஸாஹிராவின் கிளைகளை ஆரம்பிப்பதாகக் கூறியே இப்பாடசாலைகளை ஜாயா ஆரம்பித்தார்.

இவ்வாறு 1942 இல் அளுத்கமையிலும்; கம்பளையிலும்; 1944 இல் மாத்தளையிலும்; 1945 இல் புத்தளத்திலும்

கிளைகள் ஆரம்பிக்கப்பட்டன. கொழும்பு கொம்பனித் தெருவிலும் ஒரு ஸாஹிரா உதயமானது.

கம்பளையில் ஸாஹிராவின் கிளையை ஆரம்பிப்பதற்காக, ஜாயாவும் டாக்டர் எம்.ஸி.எம். கலீலும் அங்கு சென்றனர். கொழும்பு ஸாஹிராவிற் கற்ற மாணவரின் பெற்றோரையும், ஊர்ப் பிரமுகர்களையும் அழைத்து, கல்லூரியின் கிளையொன்றை நிறுவுவதைப் பற்றிக் கூறியவுடன் அவர்கள் மிகவும் மகிழ்ச்சியடைந்து பூரண ஒத்துழைப்பு வழங்கினர். ஜும்ஆப் பள்ளிவாசல் நிலத்தில் ஒரு பகுதி வழங்கப்பட்டு அதற்குள் அமைந்திருந்த குர்ஆன் பாடசாலைக் கட்டிடத்தில் பாடசாலை ஆரம்பமாகியது. கம்பளையில் பெருந் தனவந்தர்களாயிருந்த ஜனாப்கள் மீராஸாஹிப், எஸ்.என். ஒமர் பாச்சா, கே.என். எஸ்.தாவூத், எம்.எஸ். செய்யத் முஹம்மத் ஆகியோர் பெருந்தொகைப் பணத்தை வழங்கியதோடு, ஒமர் பாச்சா நிலமும் வழங்கினார். கொழும்பு ஸாஹிராவிற் கடமையாற்றிக் கொண்டிருந்த பேராசிரியர் செய்யத் ரவூப் பாஷா அதிபராக அனுப்பப்பட்டார். அவரைத் தொடர்ந்து ஸாஹிராவிற் சிறந்த மாணவனாகத் திகழ்ந்து, அலிகார் பல்கலைக்கழகத்திலிருந்து எம்.ஏ. பட்டத்தோடு நாடு திரும்பியிருந்த பதியுத்தீன் (பின்னர் கல்வி அமைச்சராயிருந்த கலாநிதி அல்ஹாஜ் பதியுத்தீன் மஹ்மூத்) அவர்களை, ஜாயா அதிபராக நியமித்தார். பதியுத்தீனின் தலைமைத்துவத்தின் கீழ் கம்பளை ஸாஹிரா அடைந்த மாபெரும் வளர்ச்சி நாடறிந்ததாகும்.

அளுத்கமை ஸாஹிராவை ஆரம்பிப்பதிலும் ஜாயாவுக்குப் போதிய ஆதரவு கிடைத்தது. ஐ.எல். எம். மஹ்மூத் ஹாஜியார் வீட்டுடனான நிலமொன்றை அன்பளிப்பாக வழங்கினார். ஜனாப். ஹனிபா என்பவர் அன்பளிப்புச் செய்த வீட்டில் விடுதியொன்று ஆரம்பிக்கப் பட்டது. ஜனாப். அப்துல் ஹமீத் என்பாரும் தாராள நிதியுதவி வழங்கினார். இவ்வாறாக பலர் மனமுவந்து உதவியதால் பாடசாலை துரிதமாக முன்னேற்றமடைந்தது. அதிபர் எஸ். எல். எம். ஷாபி மரைக்காரின் தலைமைத்துவத்தில் மிகச் சிறந்தவோர் கல்லூரியாக இது வளர்ச்சி கண்டது.

மாத்தளையிலும் இவ்வாறே. மாத்தளைப் பள்ளிவா சலில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் பெருந்தொகையானோர் உற்சாகமாகக் கலந்து கொண்ட னர். மீஸான் ஹாஜியார் அவர்கள் உடனடியாகவே பத்தாயிரம் ரூபாய் நன்கொடை வழங்கினார். குழுமியிருந்த ஏனையோரும் நன்கொடையளிக்க வாக்களித்த தொகை ஓர் இலட்சத்தைத் தாண்டியது. குழுவொன்று நியமிக்கப்பட்டு பூர்வாங்க வேலைகள் உடனடியாகவே ஆரம்பிக்கப்பட்டன.

புத்தளத்திற் கிளை அமைக்கும் முயற்சியும் மகத்தான வெற்றியளித்தது. கொழும்பு ஸாஹிராவின் பழைய மாணவர்களும், அப்பிரதேசத்தவர்களும் ஒன்றிணைந்து கிளையை ஆரம்பித்தனர்.

போர் முடிவில், கொழும்பு ஸாஹிரா இயங்கத் தொடங்கியதும், மாகாண ஸாஹிராக்களிலுள்ள மாணவர்க

ளுள் அநேகமானோர் கொழும்பு திரும்பத் தொடங்கினர். ஆயினும் கிளைக் கல்லூரிகள் அதன் மூலம் வீழ்ச்சியடையாது, பாதுகாக்கப்பட்டு, வளர்க்கப்பட்டன. அவை மேலும் சுதந்திரமாக இயங்கி வளர்ச்சியடையும் பொருட்டு, கொழும்பு ஸாஹிராவின் கிளைகள் எனும் அந்தஸ்து 1947 இல் நீக்கப்பட்டு, தனித்துவமான நிலை அவற்றிற்கு வழங்கப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் ஸாஹிராவின் கிளையொன்றை ஆரம்பிக்கவும் ஜாயா முயற்சி செய்தார். எனினும் அக்கிளையைத் தோற்றுவிக்கும் முயற்சி பலன் அளிக்கவில்லை. ஏன் அவ்வாறு பலனளிக்கவில்லை என்பதற்கான நீண்ட விளக்கமொன்று ஜனாப் எம். எஸ். அப்துற் றஹீம் எழுதிய "யாழ்ப்பாண முஸ்லிம்களின் வரலாறும் பண்பாடும்" எனும் நூலிற் காணப்படுகிறது. அந்நூலுக்கான முன்னுரையில் நீதியரசர் மர்ஹூம் அல்ஹாஜ் எம்.எம். அப்துல் காதர் அவர்களும் அதைப்பற்றி விளக்கியுள்ளார்.

கிழக்கு மாகாணத்திலும் ஸாஹிராவொன்றைத் தாபிக்க ஜாயா விருப்பங் கொண்டார். அதற்காக அவர் இம்மாகாணத்துக்கு வருகை தந்ததோடு, இப்பிரதேசப் பிரமுகர்களோடு கொழும்பிலும் பல முறை தொடர்பு கொண்டார். எனினும் இம்முயற்சி பலனளிக்கவில்லை.

கிழக்கு மாகாணத்தின் அன்றைய பொருளாதார நிலையே இதற்குக் காரணமாயிருந்திருக்கலாம்.

இப்பிரதேசத்தின் அன்றைய பொருளாதாரம் முற்றிலும் வேளாண்மைச் செய்கையிலேயே தங்கியிருந்தது. கல்லோயா நீர்ப்பாசனத்திட்டம் ஆரம்பிக்கப்படுவதற்கு முன், ஒரு போக வேளாண்மையே செய்யப்பட்டது. தண்ணீர் பற்றாக் குறையினாலும், பூச்சி புழுக்களினாலும் விவசாயம் அடிக்கடி பாதிப்புற்றது. வேளாண்மைச் செய்கை தவிர்ந்த வேறெவ்வித பாரிய விவசாய, வர்த்தக முயற்சிகள் இருக்கவுமில்லை. அதனால் பணப்புழக்கம் மிகக் குறைவு. பல ஏக்கர் நிலத்தை உடைமையாகக் கொண்ட நிலச்சுவாந்தர்கள் (போடிமார்) சிலர் இருந்த போதிலும் அவர்களிடம் நிலம் இருந்ததேயொழியப் பணப் புழக்கம் இருக்கவில்லை. எனவே ஸாஹிரா ஸ்தாபிதத்தை முன்னெடுத்துச் செல்லக்கூடிய பணவசதி கிழக்கு மாகாணத்தில் இல்லாதிருந்ததே முக்கிய காரணமெனலாம்.

அத்துடன், இப்பிரதேச சாதாரண மக்களுக்கு கல்வியில் அக்கறை குறைவாயிருந்தமையும்; அவ்வக்கறையை ஏற்படுத்தக் கூடிய கவர்ச்சிமிக்க, ஆளுமை பொருந்திய கல்விமானோ, கல்வி இயக்கமோ அவர்களிடையே இல்லாமலிருந்ததும் காரணங்களாகக் கொள்ளப்படலாம்.

ஆயினும் கிழக்கிலே பின்னர் தோன்றிய ஸாஹிராவொன்றுக்கான அடிக்கல்லை ஜாயாவே நாட்டியுள்ளார். இலங்கையின் முதலாவது நாடாளுமன்றத் திற்கு கல்முனைத் தொகுதியின் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, உள்நாட்டலுவல்கள் அமைச்சின் பாராளுமன்றச் செயலாளராக விளங்கிய கேட் முதலியார்

எம். எஸ். காரியப்பர் அவர்களின் பெருமுயற்சியினால் சாய்ந்தமருது ஆங்கிலக் கனிஷ்ட பாடசாலை 1949 நவம்பர் 16 இல் நிறுவப்பட்டது. இதற்கான அடிக்கல்லை அவ்வேளையிற் தொழிலமைச்சராயிருந்த ரி. பி. ஜாயாவே நாட்டினார்.

1957 இல் கல்வி அமைச்சர் கலாநிதி டப்ளியூ. தஹநாயக்கா இப்பாடசாலைக்கு வருகை தந்தார். அப்போதும் நாடாளுமன்ற உறுப்பினராயிருந்த கேட் முதலியார் காரியப்பரின் வேண்டுகோளுக்கிணங்க, இது சிரேஷ்ட பாடசாலையாக 6.6.1957 இல் தரமுயர்த்தப்பட்டது.

காலக்கிரமத்தில் இப்பாடசாலைக்குப் பொதுப்பெயரொன்று சூட்டப்படல் வேண்டுமெனும் விருப்பம் பெற்றோரிடையேயும், அப்பிரதேசப் பிரமுகர்களிடையேயும் மேலோங்கியது. 1967 மார்ச் 1 ஆம் திகதி நடைபெற்ற பெற்றோர்-ஆசிரியர் சங்கக் கூட்டமொன்றில், அவ்வேளையில் அதிபராகக் கடமையாற்றிய இக்கட்டுரையாளரினால் 'கல்முனை ஸாஹிராக் கல்லூரி' யெனப் பெயர்மாற்றம் செய்யலாமெனக் குறிப்பிடப்பட்டதும், ஒருமனதாக அது ஏற்றுக்கொள்ளப்பட்டு, உரிய அங்கீகாரங்கள் பெறப்பட்ட பின்னர், 1967 ஜுன் 5 ஆம் திகதியிலிருந்து அப்பெயர் நடைமுறைக்கு வந்தது.

எனவே, கொழும்பு ஸாஹிராக் கல்லூரியின் கிளையொன்றைக் கிழக்கிலே ஆரம்பிக்கும் ஜாயாவின் முயற்சி நிறைவேறவில்லையாயினும், இன்று பிரபல்யம்

பெற்றுள்ள கல்முனை ஸாஹிராவின் முதற்கட்டிடத்துக்கான அடிக்கல்லை நாட்டும் பாக்கியம் அவருக்கே கிடைத்தது.

## கல்விக் கொள்கைகள்

ஜாயாவின் பொதுக் கல்விக் கொள்கையில் நான்கு முக்கிய விடயங்களை அவதானிக்கலாம்.

1. தாய் மொழிக் கல்வியின் தலையாய இடம்
2. ஆங்கிலக் கல்வியின் முக்கியத்துவம்
3. சமயச் சூழலில் கல்வி அளிக்கப்படல்
4. பெண் கல்வி

மாணவரின் கல்வி தாய்மொழி மூலமே ஆரம்பிக்கப்படல் வேண்டுமென்பது அவரது சித்தாந்தமாகும். அப்போதுதான் மாணவர் சுயமாகச் சிந்திக்கவும் செயற்படவும், அதன்மூலம் ஆற்றல் வளரவும் முடியும். 'கல்வியின் ஆரம்பக்கட்டத்தில் போதனையின்அடிப்படையாக சுயமொழியே இருக்கவேண்டும்; அதன் பின்னரே ஆங்கிலத்தை, அதுவும் சுயமொழியின் அடிப்படையிலேயே கற்பிக்கவேண்டும்' எனத் தெளிவாகக் குறிப்பிட்டார்.

இக்கருத்து வெளியிடப்பட்ட காலகட்டத்தின் அடிப்படையில் இதனை நோக்குதல் வேண்டும். சிங்களம், தமிழ் ஆகிய மொழிகள் மூலம் கல்வி பெறுதல் மதிப்புக் குறைவாகக் கருதப்பட்டு; ஆங்கிலக் கல்விக்கே மதிப்பும்

மரியாதையும் வழங்கப்பட்ட இந்நூற்றாண்டின் ஆரம்ப தசாப்தங்களில் இவ்வாறு ஜாயா கூறியமை அவரது தூரதிருஷ்டிப் பார்வையையும் சிந்தனைத் தெளிவையும் காட்டுகின்றன.

அதேவேளை, ஆங்கிலக் கல்வியின் முக்கியத்துவத்தையும் அவர் உணர்த்தத் தவறவில்லை. "ஆங்கிலக் கல்வியின் அழுத்தமான செல்வாக்கின் மூலமே அறிவுமேன்மை, சமூகத்திறன், அரசியல் அதிகாரம் பெற்ற உயர் சமூகமாக முஸ்லிம்களைக் கொண்டுவர முடியும்" எனக் கூறியுள்ளார்.

1914 இல் 'இலங்கை முஸ்லிம் ரிவியூ' எனும் சஞ்சிகையில் அவர் எழுதிய, "இலங்கை முஸ்லிம்களும் ஆங்கிலக் கல்வியும்" எனும் கட்டுரையில் ஆங்கிலத்தின் அவசியத்தை மிகவும் வலியுறுத்தியுள்ளார்.

எத்தகைய கல்வியை வழங்கினாலும், சமயச் சூழலிலேயே அதனைச் செய்தல் வேண்டும் என்பது ஜாயாவின் உறுதியான கொள்கையாகும். "இஸ்லாமிய சூழ்நிலையிலேயே எமது மாணவர், பொது வாழ்விலிருந்து அதிக படிப்பினைகளைப் பெறுவதோடு, அவ்வாழ்வுக்குத் தமது பங்களிப்பையும் செலுத்தமுடியும் என நாம் நம்புகிறோம். நாம் பின்பற்றும் சமயத்தின் உணர்வுகளைத் தம்மகத்தே கொண்டு எமது மாணவர் தன்னம்பிக்கையோடும், கடமையுணர்வோடும் வாழ்வை எதிர்நோக்குவர் என நிச்சயம் நம்புகின்றோம். செழுமை பொருந்திய சமய அனுபவங்களின் அடிப்படையிலமைந்த

கல்வியினாலேயே அப்பண்புகளை வழங்க முடியும்... ......குழந்தைப் பருவம் சமயச் சூழலிலும், பிறரது சமயங்களைச் சமரச நோக்கில் பார்க்கப் பழகும் பண்பிலும் வளரும் வண்ணம் பௌத்த, இந்து, கிறீஸ்தவ, முஸ்லிம் பாடசாலைகள் தமது அமைப்புக்களை ஏற்படுத்தி நிர்வகித்துவரல் வேண்டும்." என ஜாயா கூறினார்.

பெண்கள் கல்வி பெறல் வேண்டுமெனவும் ஜாயா வலியுறுத்தினார். இலங்கை முஸ்லிம் சங்கத்திற் பேசும்பொழுது, "கல்வியிலிருந்து பெறுதற்குரிய உயர் நலன்களையும், கலாசார மறுமலர்ச்சியையும் எமது தாய்மாருக்கும், மனைவிமாருக்கும் மறுக்கவேண்டுமா?...... இவ்வாறானவற்றை வழங்குமாறு எமது மதமே அறிவுறுத்துகின்றது. ஆண்களுக்கும், பெண்களுக்கும் கல்வியின் அவசியத்தை வலியுறுத்துகின்றவொரு மதத்தைச் சேர்ந்தவர்கள் நாம். சர்வ குணநலமும் வாய்ந்த ஆயிஷா நாயகியையும். பண்புகள் மிக்க பாத்திமா நாயகியையும் உருவாக்கிய மதத்தைச் சேர்ந்தவர் நாம். தனது வரலாற்றின் உச்சக்கட்டத்திலிருந்த காலத்திலே பெண் கல்வியாளர்களையும், சீர்திருத்தவாதிகளையும் உலகுக்களித்த மதத்தைச் சேர்ந்தவர் நாம்." எனக் குறிப்பிட்டுள்ளார்.

ஆசிரியர் நலன்களைப் பாதுகாப்பதிலும் ஜாயா மிகவும் அக்கறையாயிருந்தார். அகில இலங்கை ஆசிரியர் சங்கம், இலங்கைத் தலைமையாசிரியர் மகாநாடு, கொழும்பு ஆசிரியர் சங்கம், அகில இலங்கை ஆசிரியர் சகாயச் சங்கம், ஆசிரியர் மீட்டல் நெறி என்பனவற்றின் தலைவராகவும்; கல்வித் திணைக்கள மறுசீரமைப்புக் குழு, ஆசிரியர் வேதனத் திட்ட உபகுழு, ஆசிரியர்

ஓய்வூதிய விதிகள் பற்றிய தெரிவுக்குழு, இலங்கை கல்விச் சங்கச் சபை, மாநகரசபைக் கல்வி ஆலோசனைக் குழு என்பனவற்றின் அங்கத்தவர் ஆகிய பதவிகளை இத்தகுபணிக்கு நன்கு பிரயோசனப்படுத்தினார்.

## அரசியலிலும் கல்விப் பணி

அரசியல் துறையில் பணியாற்றிய வேளைகளிலும் ஜாயாவின் கல்விப்பணிகள் தடையின்றித் தொடர்ந்தன . 1924 இல் சட்ட நிரூபணசபையின் அங்கத்தவரானார். 1926 இல் அதனது கல்விச் சபையின் அங்கத்தவர்களுள் ஒருவரானார். 1936 ஆம் ஆண்டிலிருந்து 1947 வரையான அரச சபையின் கல்விக் குழுவின் அங்கத்தவராகத் தொடர்ந்து கடமையாற்றினார். அக்குழுவின் பத்து அங்கத்தினர்களுள் இவரும், ஸேர் றாஸிக் பரீத் அவர்களும் முஸ்லிம்களாயிருந்தனர். இலங்கையில் இலவசக் கல்விமுறை இக்குழுவினாலேயே புகுத்தப்பட்டு கல்விப் புரட்சி ஏற்படுத்தப்பட்டது. "ஜாயா ஒரு கனவான்; கல்விமான்; தியாகி; எங்களுடன் சேர்ந்து இலவசக் கல்விக்காக உழைத்தவர்" என இலவசக் கல்வியின் தந்தை சி.டப்ளியு.டப்ளியு. கன்னங்கரா ஒருமுறை குறிப்பிட்டார்.

ஜாயா அங்கத்துவம் வகித்த கல்விக்குழு, முஸ்லிம் கல்வியை முன்னேற்றுவதற்கு எடுத்த நடவடிக்கைகளை

எ.ஏ்ம்.எ. அஸீஸ் பின்வருமாறு குறிப்பிடுகிறார்:

"இலங்கையின் முஸ்லிம் பிரதேசங்களிலே அநேக சுயமொழிப் பாடசாலைகள் நிறுவப்பட்டன. இவற்றிலே கற்பிப்பதற்குப் போதிய முஸ்லிம் ஆசிரியர் இல்லாக்குறை இருந்தது. முஸ்லிம் ஆசிரியர்களுக்கென விசேட ஆசிரியர் கலாசாலைகளை ஸ்தாபித்ததன் மூலம் இப்பிரச்சினை தீர்க்கப்பட்டது. அறபுக் கலாசாலைகளையும், அவற்றின் தராதரப் பத்திரங்களையும் கல்வித்திணைக்களம் அங்கீகரிக்குமாறு இக் கல்விக்குழு சிபார்சு செய்தது. இதன் மூலம் மௌலவிகள் அரசினர் பாடசாலைகளில் ஆசிரியர்களாக நியமிக்கப்பட்டு, அரசாங்கமே வேதனம் வழங்குவதற்கான வழி பிறந்தது. பாடசாலையிலேயே மாணவருக்கு அவர்களது சமயத்தைப் போதிப்பதற்கான உற்சாகம் அளிக்கப்பட்டது. இதன் விளைவாகவே ஒவ்வொரு மாணவனுக்கும் அவனது பெற்றோரின் சமயத்தைக் கற்பித்தல் பாடசாலையின் பாடத்திட்டத்தில் ஒரு பகுதியாகவே இடம் பெறல் வேண்டுமென, 1939 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்கக் கட்டளைச் சட்டத்தின் 4 ஆம் பகுதி அமைந்தது. இதன் மூலம் 'மக்தபா' எனப்படும் குர்ஆன் பாடசாலைக்கும், தற்கால அரசாங்கப் பாடசாலைக்கும் இடையே இணைப்புப் பாலமொன்று உருவாகியது. கடந்த நூற்றாண்டின் விசேட முஸ்லிம் பாடசாலைகளின் மறுபிறப்பு இதுவெனக் கொள்ளலாம். இலங்கை முஸ்லிம்களிடையே கல்வி விழிப்புணர்ச்சி யேற்பட இது உதவியதோடு, எல்லாப் பிரதேச முஸ்லிம் களின் ஒத்துழைப்பைப் பெறுவதற்கும் உதவியது."

## பாகிஸ்தான் உயர் ஸ்தானிகர்

1950 ஆம் ஆண்டில் பாகிஸ்தானுக்கான இலங்கையின் உயர் ஸ்தானிகராக ஜாயா நியமிக்கப்பட்டார். புதிதாக சுதந்திரமடைந்த இலங்கைக்கும் புதிதாக உருவான பாகிஸ்தானுக்குமிடையே நல்லுறவை ஏற்படுத்தவும், வளர்க்கவும் மிகப் பொருத்தமானவர் ஜாயாவே எனப் பிரதமர் டீ.எஸ்.சேனநாயக்கா கருதியதனால், ஜாயா பாகிஸ்தான் சென்றார்.

அங்கு மிகவும் விரும்பப்பட்டவொரு தூதுவராக அவர் விளங்கினார். அவரது பதவிக்காலம் முடிவுறும் தறுவாயில் அப்போதையப் பிரதமர் ஸேர் ஜோன் கொத்தலாவலை பாகிஸ்தான் சென்றிருந்தார். அவருக்களிக்கப்பட்ட விருந்துபசாரமொன்றிற் பேசிய அனைவரும் ஜாயா அங்கு தொடர்ந்து கடமையாற்ற வேண்டுமென வலியுறுத்தினர். "நீங்கள் விரும்பும் காலம் வரை அவரை வைத்துக்கொள்ளலாம்" எனப் பிரதமர் பதிலளித்தார். இதன் பிரகாரம் 1957 வரை ஜாயா அங்கு கடமையாற்றினார்.

பாகிஸ்தானில் அவர் இலங்கையின் உயர் ஸ்தானிகராகக் கடமையாற்றிய காலத்தைப் பற்றிப் பாகிஸ்தான் பத்திரிகையொன்று பின்வருமாறு கூறுகிறது:

"தனது நாட்டுக்குச் சேவையாற்றுவதற்கு ஜாயா மிகவும் பொருத்தமானவர். அவரது நாட்டுக்கும் எமது



பாகிஸ்தானிலுள்ள பஞ்சாப் பல்கலைக்கழகம் ரி. பி. ஜாயாவுக்குக் கலாநிதிப் பட்டமளித்துக் கௌரவித்தது. அப்பட்டமளிப்பு விழாவின் காட்சி.

நாட்டுக்குமிடையே மிக நெருக்கமான உறவொன்றை அவர் ஏற்படுத்தியதோடு மட்டுமல்ல; இவ்விரு நாடுகளிடையே என்றும் தொடர்ச்சியாக வளரும் உறவுக்கான பாதையையும் அமைத்தார். பிறநாட்டுத் தூதுவர் குழாத்தின் தலைவராகவும் அவர் கடமையாற்றினார். தமக்கெனக் குறித்துரைக்கப்பட்ட காலத்துக்கு மேலதிகமாகப் பாகிஸ்தானிற் கடமையாற்றிய ஒரேயொரு தூதுவர் இவரே என்பது அதற்கான காரணமாயிருக்கலாம். இங்கு அவர் வாழ்ந்த காலத்தில், மக்களோடு அவர் கொண்டிருந்த மிக நெருக்கமான உறவின் காரணமாக, அவரை எங்களில் ஒருவராகவே கருதினோம்."

பாகிஸ்தானில் இலங்கைத் தூதுவராகக் கடமையாற்றிய காலத்திலும் இலங்கை முஸ்லிம்களின் கல்வியில் அக்கறை கொண்டவராயிருந்தார். அதிலும் குறிப்பாகக் கொழும்பு ஸாஹிராவின் தொடரான வளர்ச்சியில் மிகுந்த அக்கறை கொண்டிருந்தார். தான் தேடிக் கண்டுபிடித்து நம்பிக்கையுடன் எ.எம்.எ. அஸீஸ் அவர்களிடம் ஒப்படைத்த ஸாஹிரா தொடர்ந்து வளர்வதில் மிக ஆர்வம் காட்டினார். அதனாற்றான் பாகிஸ்தானில் தூதுவராகக் கடமையாற்றிய காலத்தில், அந்நாட்டில் வாழ்ந்த ஸாஹிராவின் பழைய மாணவர்களை ஒருங்கிணைத்துப் பழைய மாணவர் சங்கமொன்றை அமைத்து ஸாஹிராவின் வளர்ச்சிக்கு உதவுவதில் அக்கறையாயிருந்தார்.

அப்பழைய மாணவர் சங்க அங்குரார்ப்பணத்தைப் பற்றி, 1951 பெப்ரவரி 10 ஆந் திகதிய 'சிந்து ஒப்சேவர்' பத்திரிகை பின்வருமாறு செய்தி வெளியிட்டது:

"கராச்சி பழைய மாணவர் சங்கத் தலைவர், சமூகமளித்திருந்த அங்கத்தினர்களுக்கு நன்றி கூறிய பின் கொழும்பு ஸாஹிராவின் அதிபரைப் பேசுமாறு வேண்டினார். அதிபர் எ.எம்.எ. அஸீஸ் பேசுகையில் இலங்கை முஸ்லிம்கள் மிகவும் நேசிக்கும் நாடும், தமது கலாசார வழிகாட்டி எனக்கொள்ளும் நாடுமான பாகிஸ்தானில் எமது மாணவர்கள் சட்டம், வங்கி, பத்திரிகைத்துறை, வர்த்தகம், கடற்படை ஆகிய துறைகளில் உயர் பதவிகளை வகித்து அந்நாட்டின் நலனுக்குத் தமது பங்களிப்பைச் செய்வதனையிட்டுப் பெருமைப்படுவதாகக் குறிப்பிட்டார். இப்பழைய மாணவர் சங்கத்தை ஸ்தாபிப்பதன் மூலம் இலங்கைக்கும், பாகிஸ்தானுக்கும் பரஸ்பர அனுகூலங்களை ஏற்படுத்தக்கூடிய தொடர்புகளை வைத்திருக்க முடியும் எனவும் குறிப்பிட்டார்.

இவ் வைபவத்தில் அவ்வேளையில் பாகிஸ்தானில் இலங்கையின் உயர் ஸ்தானிகராகக் கடமையாற்றிய மேன்மை தங்கிய ரி.பி. ஜாயா பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு அங்குரார்ப்பணம் செய்து வைத்தார். அவர் அங்கு பேசுகையில், 'எனது பழைய மாணவர்களிற் பலர் பல தொழிற்றுறைகளிலும், வர்த்தகத்திலும், கடற்படையிலும் மிக நம்பிக்கையான, பொறுப்பு வாய்ந்த பதவிகளை வகிப்பதையிட்டுப் பெருமைப்படுகிறேன்'

எனக் குறிப்பிட்டார்."

பாகிஸ்தானில் உயர் ஸ்தானிகராகக் கடமையாற்றிய காலத்திலேயே பஞ்சாப் பல்கலைக்கழகம் கௌரவ கலாநிதிப் பட்டத்தை அவருக்கு வழங்கியது. அப்பட்டமளிப்பு விழாவில் அவர் ஆற்றிய உரை அவரது இலட்சியத்தையும், வழியையும் கோடிட்டுக் காட்டுகிறது. அவர் கூறினார்: "எனது வாழ்வின் அதி சிறந்த பெரும் பகுதியை ஆசிரியனாகவே கழித்துள்ளேன்.. கல்வியின் பல மட்டங்களிலும் உழைத்துள்ளேன். அரசியல் வாழ்வில் என்னென்ன பெருமையும் புகழும் எனக்குக் கிடைத்தனவோ, அவை யாவும் எனது நாட்டின் இளந்தலைமுறையினரிடையே நான் ஆற்றிய கல்விப் பணிகளின் பெறுபேறுகளேயாகும்."

## சொல்லும் செயலும்

ஜாயா தனது ஆரம்பகால உரைகளாலும், எழுத்துக்களாலும் எவ்வாறு கல்வியின் தேவையைத் தனது சமுதாயத்துக்கு உணர்த்தினார்; காலப்போக்கில் தமது மாணவரை எவ்வாறு வழி நடத்திச் சென்றார்; ஸாஹிராவின் மூலம் எவ்வாறு அறிவாற்றலுள்ள சமுதாயமொன்றைக் கட்டியெழுப்பினார் என்பதற்கு தேசமான்ய அல்ஹாஜ் டாக்டர் எம்.ஸி.எம். கலீல் அவர்களின் பின்வரும் கூற்றுச் சான்று பகரும்:

"அக்கால முஸ்லிம்கள் சகல துறைகளிலும் பின்தங்கியிருந்தார்கள். படித்த சில முஸ்லிம் வாலிபர்கள்

தமக்குள் இலங்கை முஸ்லிம் சங்கம் என்ற ஒரு ஸ்தாபனத்தை வைத்துச் சொற்போர்களும், சொற்பொழிவுகளும் நிகழ்த்திக் கொண்டிருந்தனர். அப்போது நான் மாணவனாக இருந்தபடியால் அதில் அங்கத்துவம் பெறவில்லை. என்றாலும் ஒரு நண்பர் என்னை அங்கு அழைத்துச் சென்றார். அங்கு புதிதாக லண்டன் பீ.ஏ. பட்டம் பெற்றதன் பின் ஜாயா சொற்பொழிவாற்றுவதாக அறிவிக்கப்பட்டது. அன்று முஸ்லிம்கள் மத்தியில் பட்டப்படிப்பு மிக அரிதாகவே இருந்தது.

கூட்டத்திற்கு புறக்டர் கமர் காசீம் தலைமை தாங்கினார். ஜாயா "மாஸினியின் வாழ்வு" என்று மகுடமிட்டுப் பேசினார். வரட்டுக் கூச்சலாக இருக்கும் என்றே நாங்கள் கருதினோம். ஜாயா அழகான ஆங்கில நடையில் உரையாற்றத் தொடங்கியதும் நாங்கள் மெய்மறந்தோம். இத்தாலியப் புரட்சிக்கு மாஸினி வித்திட்ட முறையை ஆதாரங்களுடன் அறுபது நிமிஷங்களுக்கு மேலாகச் சரள நடையில் விளக்கினார். பிரிவினையால் சிதறுண்டு, புகழிழந்து, பொலிவிழந்து, அழிவின் எல்லையில் இருந்த இத்தாலியை 'இளம் இத்தாலி' என்ற இயக்கத்தின் மூலம் தனது உழைப்பால், தியாகத்தால் மாஸினி கட்டியெழுப்பிய முறையை ஜாயா தனக்கேயுரிய பாணியில் கூறியது எங்களை உணர்ச்சிவசப்பட்ட ஊமைகளாக்கியது. ஜாயாவின் பேச்சால் கட்டுண்ட நாங்கள் எமது மக்களுக்கும் நாட்டுக்கும் நல்லதைச் செய்யக் கிளர்ந்து எழவேண்டும் என்று கருதினோம்."

## அல்லாஹ்வின் அங்கீகாரம்

கலாநிதி ஜாயாவின் கல்விப் பணிகளை, அரசியற் சேவைகளை, சமுதாய உதவிகளை அல்லாஹ் அங்கீகரித்து ஏற்றுக்கொண்டான் என்பதைக் காட்டும் வகையில் அவரது இறுதி யாத்திரை அமைந்தது. கோடியில் ஒருவருக்குக் கிடைக்கும் பாக்கியம் அவருக்குக் கிடைத்தது.

இலங்கையிலிருந்து வருடாவருடம் ஹஜ்ஜுக்குச் செல்லும் முஸ்லிம்கள் மக்காவிற் தங்குவதிற் பல வசதியீனங்களை எதிர்நோக்கினர். இவற்றை நீக்குவதற் கான வழி, மக்காவில் ஒரு கட்டிடத்தைக் கொள்வனவு செய்து அதனை 'இலங்கை இல்லம்' என மாற்றுவதே எனத் தீர்மானிக்கப்பட்டது. இக்கொள்வனவு அலுவல் களைப் பூர்த்தி செய்வதற்காக இலங்கையிலிருந்து சென்ற தூதுக் குழுவுக்குக் கலாநிதி ஜாயா தலைமை தாங்கிச் சென்றார். இது அவரது மூன்றாவது ஹஜ்ஜுப் பயணமுமாகும். மட்டக்களப்பைச் சேர்ந்த முதலியார் சின்னலெவ்வை, கண்டியைச் சேர்ந்த சட்டத்தரணி மரிக்கார், ஏ.ஐ. ஹமீத் ஆகியோர் குழுவின் ஏனைய அங்கத்தினராவர்.

1960 ஆம் ஆண்டு மே மாதம் 13 ஆம் திகதி இலங்கையிலிருந்து புறப்பட்ட ஜாயாவும் குழுவினரும் மக்காவையடைந்து, அதன்பின்னர் மே 24 ஆம் திகதி

மதீனாவையடைந்தனர். அங்கு தம்ஷீர் ஹோட்டலில் தங்கிய ஜாயாவுக்கு, அன்றிரவு ஹாஷிம் வபாக்கி மௌலானா இராப்போசன விருந்தளித்தார்.

அடுத்த நாட்காலை ஜாயாவுக்குச் சிறிது காய்ச்சல் ஏற்பட்டது. ஜித்தாவிலிருந்து மதீனாவுக்குக் கார் மூலம் பிரயாணம் செய்த களைப்பினால் இது ஏற்பட்டிருக்கலாம் என முதலில் கருதப்பட்டது. அவ்வேளை மதீனாவிற் தங்கியிருந்த இலங்கையைச் சேர்ந்த டாக்டர் மொஹிதீன் ஹஸனும், டாக்டர் ஏ.ஆர்.ஏ. லாபீரும் உடனடி சிகிச்சை யளித்தனர். ஆயினும், சுகவீனம் அதிகரித்ததினால் 27 ஆம் திகதி அவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டார்.

இவரது மோசமான உடல் நிலையைக் கேள்வியுற்ற சவூதி மன்னர், இரு வைத்திய நிபுணர்களை ஜித்தாவிலி ருந்து விசேட விமானத்தில் உடனடியாகவே மதீனாவுக்கு அனுப்பி வைத்தார். ஆயினும், 1960 ஆம் ஆண்டு மே மாதம் 31 ஆம் திகதி, துல்ஹஜ் 9ஆம் நாள் தனது ஹஜ்ஜுக் கடமையை மூன்றாவது முறை முடித்துக் கொண்ட, இலங்கை முஸ்லிம்களுக்கு இல்லம் தேடிக்கொடுத்த ஜாயாவை அல்லாஹ் தன்பால் அழைத்துக்கொண்டான். (இன்னா லில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிஊன்.)

அவரது ஜனாஸா நல்லடக்கத்துக்கு பூரண அரசமரியாதை வழங்குமாறு மன்னர் உத்தரவிட்டார்.

மதீனாவின் ஆளுநர், பிரதம நீதிபதி, உயர் அதிகாரிகள், இராணுவத்தினர், பொலிஸார் உட்பட லட்சோபலட்சம் உலக மாந்தர் ஜனாஸாத் தொழுகையிற் கலந்து கொண்டனர்.

ஓர் ஆத்மீகத் தூய்மையாளனது சேவையின் அங்கீகாரம் கிடைத்தற்கரிய முறையில் ஜாயாவுக்குக் கிடைத்துவிட்டது.




"ஜாயா ஞாபகார்த்த நிதியம்" அங்குரார்ப்பண வைபவம். தேசமான்ய டாக்டர் எம். ஸி.எம். கலீல் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் அப்போதைய பாகிஸ்தான் ஜனாதிபதி பீர்ல்ட் மார்ஷல் அயூப்கான் அங்குரார்ப்பண உரை நிகழ்த்துகிறார். அவரது வெளிநாட்டமைச்சர் சுல்பிகார் அலி பூட்டோ, இலங்கையின் அப்போதைய கல்வி அமைச்சர் கலாநிதி பதியுத்தீன் மஹ்மூத் ஆகியோரும் மேடையில் அமர்ந்துள்ளனர்.

## Books and Articles on Dr. T. B Jayah


1. කමාල්දීන්, එස්. එම් - ආචාර්ය ටී. බී. ජායාගේ උදාර දර්ශණය
ජාතික අධ්‍යාපන ආයතනය, මහරගම 1990

2. *ஏ.எச்.எம். அஸ்வர், "காலத்தின் போக்கையுணர்ந்து மக்களை வழிநடத்திய தலைவர்,"* ***தினகரன் ஜாயா நினைவுச் சிறப்பிதழ், மே 31, 1962***

3. *ஏ.எச். எம். அஸ்வர், "ஜாயா அவர்கள் ஒரு கலைக்கூடம்,"* ***தினகரன்*** *31.5.66*

4. *ஏ.எச்.எம். அஸ்வர், "இலட்சிய வழி சென்ற மர்ஹூம் ஜாயா,"* ***தினகரன்*** *31.5.1984*

5. *எ.எம்.எ. அஸீஸ், "அல்ஹாஜ் ரி.பி. ஜாயாவின் முதலாவது மறைவு தினம்,"* ***தினகரன்*** *31.5.1961*

6. *எம்.எல்.எம். பாறூக், "மர்ஹூம் ஜாயா ஒரு தனிநபரல்ல; அவர் ஒரு ஸ்தாபனம், ஒரு யுகம்,"* ***தினகரன்*** *31.5.1984*

7. *எஸ்.எச்.எம். ஜெமீல், "கலாநிதி ஜாயாவின் கல்விப் பணிகள்,"* ***தினகரன்,*** *1985 பெப்ரவரி 11,12,13,14*

8. *எஸ்.எம். கமால்தீன்* ***,கலாநிதி துவான் புர்ஹானுத்தீன் ஜாயா*** *(ஆங்கில மூலம்; தமிழாக்கம்: எஸ்.எச்.எம்.*

ஜெமீல்) தேசிய கல்வி நிறுவகம், மகரகம, 1990

9. எம்.டீ. கிச்சிலான், " மர்ஹூம் ரி.பி. ஜாயா" **தினகரன்,** 31.5.1984

10. முஸ்தபா ஏ. கபூர் "புனித பூமியில் இடம்பெற்ற புனிதர் ஜாயா," **தினகரன் – ஜாயா நினைவுச் சிறப்பிதழ்** மே 31, 1962

11. எம்.ஏ.எம். சுக்ரி, "இலங்கையில் முஸ்லிம் கல்வி சுடர்விட்டெரியச் செய்த மேதை," **தினகரன்-ஜாயா நினைவுச் சிறப்பிதழ்** மே 31, 1962

12. **உதயம் – ஜாயா மலர்,** உதயம் பிரின்டர்ஸ் அன்ட் பப்ளிஷர்ஸ், கொழும்பு, மே 29 – ஜுன் 11,1981

13. Amit M. H., "Dr. T. B. Jayah : Lover of Humanity", **Daily News**, 4. 6. 1990

14. Bakeer Markar, M. A. "The True Muslim", **Daily News**, May 30, 1981

15. Bakeer Markar M. A., "T. B'.Jayah - He brought light to the Muslims" **Daily News**, January 1, 1994

16. Jennings, Sir Ivor, "Message to the Crescent Jubilee Number, Zahira College, Colombo" 1946

17. Kaleel, Dr. M. C. M. "Glorious Recollection", **Daily News**, May 30, 1981

18. Kaleel Dr. M. C. M. "Dr. Jayah; Great Educationist", **Daily News**, 6. 6. 1984

19. Kaleel, Dr. M. C. M. "Jayah, The Bridge Builder", **Daily News**, January 1, 1990

20. Kamaldeen, S. M. **Dr. T. B. Jayah, "The Visionary"** National Institute of Education, Maharagama, 1990

21. Kitchilan M. D. "The Last Moment" **Daily News**, May 30, 1981

22. Lokubandara Hon. W. J. M. "T. B. Jayah - An Illustrious Son of Sri Lanka", **Daily News**, January 1, 1990

23. Lokubandara, Hon. W. J. M. & Kaleel, Dr. M. C. M., **Dr. T. B. Jayah**, National Institute of Education, Maharagama, 1990

24. Mahroof M. M. M., **Muslim Leaders of Sri Lanka, No. 2, Dr. T. B. Jayah**, Bureau of Publications, All Ceylon Y. M. M. A. Conference, Colombo, 1980

25. Shukri, Dr. M. A. M. "Dr. Jayahs' Contribution to National Development", Lecture delivered at Savsiripaya at Dr. T. B. Jayah Birth Centenary, January 25, 1990

26. T. B. Jayah - "Pioneer of Muslim Education", Zahira College, Colombo, O. B. A., 1962

## ஆசிரியரின் பிற வெளியீடுகள்

* எ. எம். எ. அஸீஸ் – கல்விச் சிந்தனைகளும், பங்களிப்பும்
* ஸேர். றாஸிக் பரீத் அவர்களின் கல்விப் பணி
* சாய்ந்தமருது ஜும் ஆப் பள்ளிவாசல் வரலாறு
* கல்விச் சிந்தனைகள்
* நினைவில் நால்வர்

பசிபிக் அச்சகம் (பி) லிமிரெட் கொழும்பு 13.